வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.2/19

வழக்கு சாட்சி - அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணியராஜ் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | அழகர் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | முத்துதேவன்பட்டி | சமயம் | |
| தாலுக்கா | தேனி | வயது | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.06.24

**( 4**ம் எதிரி இறந்துவிட்டார்**. 1,3,5** எதிரிகள் ஆஜர்**. 2**ம் எதிரி ஆஜர் இல்லை**. 2** எதிரி சார்பில் கு**.**வி**.**மு**.**ச**.** பிரிவு **317**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

அரசு தரப்பில் முதல் விசாரணை

1 முதல் 3 எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா1 ஐ தெரியும். அசா1 ன் வயலில் நான் தண்ணீர் கட்டும் வேலை செய்கிறேன். கடந்த 5.10.17 அன்று பகல் 12.30 மணிக்கு ஜெயகுமார், பாலகுருசாமி, விஜயராஜ் ஆகியோர்கள் அசா1 ன் வயலில் அத்துமீறி ஜேசிப் வாகனத்துடன் கடப்பாறை, கம்பி ஆகியவற்றுடன் நுழைந்து அசா1 ஐ பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறினார்கள். நானும், பாண்டி என்ற நபரும் சென்று எதிரிகளை சத்தம் போட்டோம். அவர்கள் அசா1 ஐ பார்த்து மீண்டும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.